சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சபரீசன், பென்கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

அ.வ.எண்.13/2005 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் இறுதி நிலை பிறப்பிக்க மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். அந்த தீர்ப்பாணையின் படி எனக்கும், கந்தசாமி மற்றும் நாகராஜ் ஆகியோர்களுக்கு தலா 1/3 பங்கு இருப்பதாகத் தான் இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். அந்த 1/3 பங்கை பிரித்து தர வேண்டும் என்று தான் மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். அதற்கு ஏற்கனவே பாகம் பிரித்துக் கொண்ட சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.13/2005 வழக்கின் தீர்ப்பிலும் நாங்கள் ஏற்கனவே வாய்மொழியாக பிரித்துக் கொண்டதாக கூறியது ஏற்றுக் கொள்ள இயலாது என்றும், வாய்மொழி பாகம் செல்லாது என்றும் கூறப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. இறுதி நிலை தீர்ப்பாணையின் படி சொத்துக்கள் யாருக்கும் பாத்தியம் இல்லாமல் பொதுவாக உள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.13/2005 வழக்கில் வாதியையும், 4 ம் பிரதிவாதியையும் தரப்பினராக சேர்க்காமல்

தாக்கல் செய்ததால் அந்த தீர்ப்பாணை வாதியையும், 4 ம் பிரதிவாதியையும் கட்டுப்படுத்தாது என்றும், அதற்கான பரிகாரமும் இந்த வழக்கில் வாதி கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் பொதுவான சொத்துக்கள் என்றும், வாதி மற்றும் 4 ம் பிரதிவாதியை தரப்பினர்களாக சேர்க்காமல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு வாதி மற்றும் 4 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளின் முதல் நிலை வாரிசான ரங்கம்மாள், சுப்பம்மாள் மற்றும் காளம்மாள் ஆகியோர்களின் வாரிசுகளை மறைத்து அ.வ.எண்.13/2005 வழக்கை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரியல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை இந்த மூவருக்கு உள்ளது என்றால் சரியல்ல. அவர்களில் சுப்பம்மாள் இறந்து விட்டதால் அவர்களின் வாரிசுகளான வாதி மற்றும் 4 பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் தலா 1/3 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.13/2005 வழக்கில் உண்மையான வாரிசு விவரங்களை காட்டி இருந்தால் அவ்வாறு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த தவறான எதிர் வழக்குரை மற்றும் 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த தவறான வழக்குரை ஆகியவற்றை வைத்து திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு காளப்ப கவுடர் மட்டுமே வாரிசு என முடிவுக்கு வந்து அவ்வாறு தீர்ப்பு அளித்தது என்றால் சரியல்ல. அவர்களின் உரிமையை மறைத்து திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு பெண் வாரிசு இருப்பதாக கூறவில்லை என்றால் சரியல்ல. காளப்ப கவுடரின் முதல் நிலை வாரிசுகள் என்ற அடிப்படையில் அவருக்கு என்ன உரிமை இருந்ததோ அதே உரிமை தான் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளின் பெண் வாரிசுகளான ரங்கம்மாள், சுப்பம்மாள் மற்றும் காளம்மாள் ஆகியோர்களின் முதல் நிலை வாரிசுகளுக்கும் தாவா சொத்து பாத்தியப்பட்ட நிலையில் மேற்படி காளம்மாள் வாதியை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டதாலும்,

ரங்கம்மாள் 4 ம் பிரதிவாதியை வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டதாலும், சுப்பம்மாள் எந்த வாரிசும் இல்லாமல் இறந்து விட்டதாலும், தாவா சொத்தில் வாதிக்கும், 4 ம் பிரதிவாதிக்கும் தலா 1/3 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. மீதமுள்ள 1/3 பாகத்தில் தான் எனக்கும், 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு பாகம் பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.